# இறைவனின் அன்னையாகிய தூய கன்னி மரியா பெருவிழா

## சனவரி 01

### திருப்பலி முன்னுரை

அன்பார்ந்தவர்களே!

பூத்திருக்கின்ற புதியாண்டிலே மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

இந்நாளும், இனிவரும் நாட்களும் ஆசீர்வாதமாக இருந்திட மனதார வாழ்த்தி மகிழ்கின்றோம்.

இறையன்னை கன்னிமரியாள் என்கின்ற விழாவினை ஆங்கில புத்தாண்டின் தொடக்கத்தில் திருஅவை கொண்டாடி மகிழ அழைக்கும் இந்த நாளில், உன்னை ஆசீர்வதித்து காப்பேன், உன்னை அருள்பொழிவு செய்வேன். உன்னை அமைதியினால் வழிநடத்துவேன் என்ற ஆசீரான வார்த்தைகளினால் நம்மை மகிழ்விக்கின்றார் யாவே தந்தையாகிய இறைவன்.

என்ன நடக்குமோ? எப்படியிருக்குமோ? என்ற ஒருவிதமான கலக்கத்தோடே இந்த நாளை நாம் சந்திக்கின்றோம். இதுயதார்த்தம் என்றாலும், நம்முடைய யாவே இறைவன் தந்தையாகிய கடவுள் தன்மக்களை நேரியவராகவே ஆண்டு, காத்து, பராமரித்து வருகின்றார் என்ற நம்பிக்கையிலே மகிழ்வுடனே வரும் நாட்களை அவருடைய பாதத்தில் ஒப்புக் கொடுத்து செபிப்போம்.

புரிய முடியாத, அறிந்து கொள்ள முடியாத நிலையிலும் எல்லாவற்றையும் மனதில் இருத்தி சிந்தித்த கன்னிமரியாள் நமக்கு நல்ல மாதிரிகை. இறைத்திட்டம் எல்லாவற்றையும் மனிதர்களால் அறிந்து கொண்டு, புரிந்து கொண்டு, ஏற்றுக் கொள்ள இயலுமா? என்றால் இதற்கு சாத்தியம் இல்லையென்பதுவே கடந்த கால அனுபவம். எனவே மரியாளைப் போல உள்ளத்தில் இருத்தி, அமைதிப்படுத்தி, தியானிக்க முன்வரும் போது உரிய

காலத்தில் புலப்படும் போது, நாமும் இடையர்களைப் போல கண்டதையும், கேட்டதையும், கொண்டு இறைவனை புகழந்திட முடியும். அன்னை மரியாள் 'என் ஆன்மா இறைவனை ஏத்திப் போற்றுகின்றது, என் மீட்பராம் கடவுளை நினைத்து என் மனம் களிகூர்கின்றது' என்று நாமும் புகழ்ந்திட முடியும்.

இத்தகைய நல்ல புதிய வாழ்வு நமக்கு சாத்தியமே என்ற மனநிலையோடு பலியிலே பங்கேற்று பயன் பெறுவோம். பலன் கொடுப்போம்.

**இறைமக்களின் மன்றாட்டுகள்:**

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. ஆசீர் அருளும் ஆண்டவரே இறைவா!

திருஅவையை முன்னெடுத்து செல்லும் எமது திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் தங்களது அழைப்பை உணர்ந்து, பெற்ற ஆசீரை முறையாக பயன்படுத்தி, பிறருக்கு உம் சார்பாக வழங்கி வாழ்ந்திட, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. ஆசீர் அருளும் ஆண்டவரே இறைவா!

நாட்டின் தலைவர்கள், ஆளுவோர் அனைவருமே, தெய்வபயத்தோடு வாழ்ந்து, தங்களது பொறுப்பையும், கடமையையும், நேரிய முறையில் செய்து, மக்களை ஒருங்கிணைத்து வழிநடத்திட, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. ஆசீர் அருளும் ஆண்டவரே இறைவா!

ஆர்வத்தோடும், ஆசையோடும் பலியிலே பங்கேற்கும் நாங்கள் பழையதை நினைத்து வருந்தாமலும், வருவதை நினைத்து கலங்காமலும், அன்னை மரியாவைப் போல அன்றாட காரியங்களில் கவனம் செலுத்தி நலமோடு வாழ்ந்தட, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. ஆசீர் அருளும் ஆண்டவரே இறைவா!

உம்முடைய அன்னை கன்னிமரியாள் கேட்டுக் கொண்டது போல, நீர் சொல்லுவது போல, நாங்கள் செயலாற்றிட, உம்முடைய திருவுளம் அறிந்து வாழ்ந்திட, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. ஆசீர் அருளும் ஆண்டவரே இறைவா!

நம்பிக்கையிழந்து, முதுமையின் கொடுமையிலும், நோயின் தாக்கத்திலும், தனிமையின் வெறுமையிலும் வாழ்வோருக்கு உம் துணை கிடைத்திடவும், நாங்கள் எங்களது சாட்சியத்தால் அவர்களை உம்பாதம் கொண்டு வந்து சேர்த்திட, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com